## 2. ITJP சாட்சியங்கள் (ITJP TESTIMONY)

சிங்கள பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களான சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் அறிக்கையின் இந்தப் பகுதி பெரும்பாலும் தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்களில் பலர் ஆட்கடத்தல்களில் தொடர்புபட்டிருந்தார்கள். கட்டளை அதிகாரிகளினதும், சகாக்களினதும் பெயர்களை அவர்கள் எம்மிடம் இரகசியமாக வழங்கினார்கள்.. தாம் அந்தப் படையணியில் பணிபுரிந்தமைக்குச் சான்றாக நிழற்படங்களையோ, ஏனைய ஆவணங்களையோ சமர்ப்பித்தார்கள், அல்லது தாம் பணிபுரிந்ததை வேறு வழிகளில் உறுதிப்படுத்தினார்கள். பல சந்தர்ப்பங்களில் வரைபடங்களில் முகாம்களை அவர்கள் அடையாளம் காட்டியதுடன், சித்திரவதைக் கூடங்களின் விரிவான வரைபடங்களையும் வரைந்து தந்தார்கள். அவர்களது அடையாளத்தை இரகசியமாகப் பேணும்பொருட்டு, அவர்கள் பணிபுரிந்த சரியான காலப்பகுதியோ, அவர்களது படையணிகளின் விபரங்களோ இங்கு வெளியிடப்படவில்லை.

இந்தச் சாட்சிகள், நான்கு நாடுகளில் வசிக்கிறார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. செயற்பாடுகள், நடைமுறைகள், மற்றும் சில சம்பவங்கள் தொடர்பாக அவர்கள் வழங்கிய மிகவும் விரிவான தகவல்கள் ஒன்றோடொன்று பொருந்துகின்றன. அவர்கள் வழங்கிய தகவல்களின் அளவைப் பார்க்கும்போது, இவை கற்பனையாக இருப்பதற்கான சாத்தியம் மிகக் குறைவானது. முன்னாள் சகாக்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்க்கும் நோக்கத்துடன், பெருமளவு விபரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இந்தச் சாட்சிகளின் வாக்கு மூலங்கள் மிகுந்த அனுபவம் மிக்க மூன்று விசாரணையாளர்களால் பெறப்பட்டன. அவர்களில் இரண்டு பேர், இலங்கைப் போர் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பணி புரிந்தார்கள்.

தாமும் பங்கு வகித்த வன்முறையின் காரணமாக உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருந்தமையால், குற்றம் குறித்த சுமையை இறக்கி வைக்கும் நோக்கத்துடன் சாட்சியமளிப்பதற்கு சிங்கள சாட்சிகளில் சிலர் ஆர்வமாக இருந்தார்கள். பாதுகாப்பாக இருக்குமானால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குத் - தாம் எங்கே உடல்களைப் புதைத்தாரென்று கூறுவதற்கும் அவர்களில் ஒருவர் ஆர்வமாக இருந்தார்.

### 2.1 கிழக்கு (THE EAST)

போரின்போது கிழக்கு மாகாணத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கேர்ணல் கருணாவின் கீழ் இயங்கிய துணைப்படைக் குழுக்களுடன் நெருக்கமாகப்

பணியாற்றினார்கள். இந்தக் குழுக்களுக்கு இடையில் 2007 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட போட்டிகளைப் புரிந்து கொள்ளும் அதேவேளை கருணா குழுவென்ற பதம், கருணா, இனியபாரதி, பிள்ளையான் ஆகியோருக்கு விசுவாசமாக செயற்பட்ட படைகள் அனைத்தையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஆட்கடத்தல்களிலும், கொலைகளிலும் சிறப்பு அதிரடிப்படையினருக்கும், கருணா குழுவுக்கும் இடையில் இணக்கமான செயற்பாடு நிலவியமை, இலங்கை குறித்த ஐக்கிய நாடுகள் (OISL) விசாரணை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆட்கடத்தல்கள் மற்றும் சிறுவர்களைப் படையில் சேர்ப்பது என்பன கருணா குழுவின் இராணுவ மூலோபாயத்தின் அடிப்படையாக இருந்ததென்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தமிழ் அரசியல்வாதிகளை படுகொலை செய்வதற்கு கருணா குழுவை சிறப்பு அதிரடிப்படையினர் பயன்படுத்தினார்களனெவும், அந்தக் கொலைகளுக்கான தயார்ப்படுத்தல்களைச் செய்ததுடன், திட்டமிடப்பட்டவாறு அவை இடம்பெறுவதை உறுதி செய்வதற்காக கொலைகள் இடம்பெற்ற பகுதிகளில் அவர்கள் பிரசன்னமாய் இருந்தார்களளெனவும் உள் சாட்சி ஒருவர் கூறினார். போட்டிக் குழுக்களை அழிப்பதற்கோ, அல்லது மக்களுக்கு அச்சமூட்டுவதற்கோ கருணா குழுவினருக்காக சிறப்பு அதிரடிப்படையினர் கொலைகளைப் புரிந்தார்களளெனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கருணா குழுவினருடன் இணைந்து பணியாற்றுவதில் தமது மூத்த அதிகாரிகள் விருப்பம் கொண்டிருக்கவில்லையெனவும், அவர்களை நம்பவில்லையெனவும் சிறப்பு அதிரடிப்படைச் சாட்சி ஒருவர் கூறினார். அத்துடன், அவர்கள் சீருடை அணியாதமையால், அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரா, அல்லது கருணா குழுவினரா என்று கண்டறிவதில் சிறப்பு அதிரடிப்படையினர் சிரமத்தை எதிர்கொண்டார்கள். இருப்பினும், கருணா குழுவுடன் சேர்ந்து செயற்படுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். நடைபேசி தொலைத் தொடர்புகளில் kilo party என்று கருணா குழுவினர் அழைக்கப்பட்டார்கள். காலப்போக்கில் கருணா குழுவின் சில அணிகள், சிறப்பு அதிரடிப்படை முகாம்களின் உள்ளேயே தங்கியிருந்தன. மேலும் சில அணிகள், சிறப்பு அதிரடிப்படையின் வெளி எல்லைக்கு உள்ளே சிறிய கொட்டில்களை அமைத்துத் தங்கியிருந்தார்கள். அதற்கு வசதியாக சிறப்பு அதிரடிப்படையினரின் கிளைமோர் குண்டுகள் எங்கு இருக்கின்றன என்ற விபரம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

கருணா குழுவினர் தமது முகாம்களுக்கு வந்து ஆயுதங்களைப் பெற்றுச் சென்றமை குறித்து – SFG87 கையெறிகுண்டுகள், T56 துப்பாக்கிகளுக்கான ரவைகள், கிளைமோர் குண்டுகள் - சிறப்பு அதிரடிப்படைச் சாட்சி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். அவற்றைப் பெற்றுச் செல்லும் தமிழர்கள் சரியான ஆட்களா என்று உறுதி செய்வதற்காக வாசலில் நிற்கும் சிறப்பு அதிரடிப்படையினர், தம்முடன் தொடர்பில் இருக்கும் கருணா குழுவின் அதிகாரியை அழைத்தமையும் உண்டு.

கொழும்பில் இடம்பெற்ற ஆட்கடத்தல்களுக்கான வேவுத் தகவல்களும் கருணா குழுவிடம் இருந்து கிடைத்தன. உண்மையில், இந்தத் தமிழ்க் குழுவிடம் இருந்து கிடைத்த புலனாய்வுத் தகவல்கள், சிறப்பு அதிரடிப்படையினரின் புலனாய்வுத் தகவல்களை விட விரிவானவையாகவும், மேம்பட்டவையாக இருந்ததாக பாதுகாப்புப் படைச் சாட்சிகள் கூறினார்கள். சந்தேக நபர்கள் கைது செய்யப்படும் சம்பவங்களின் வீதம் அதிகரித்ததுடன், ஆட்கடத்தல் நடவடிக்கைகளின் எண்ணிக்கையும் வாரம் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்காக அதிகரித்தது. கிழக்கு மாகாணத்தில் கருணா குழு (மற்றும் அந்தக் குழுவுடன் தொடர்புடைய அரசியல் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்) ஆகியவற்றின் உறுப்பினர்களைத் தடுத்து நிறுத்தவோ, சோதனையிடவோ வேண்டாமென உத்தரவிடப்பட்டதாக சிறப்பு அதிரடிப்படைச் சாட்சிகள் கூறினார்கள்.

> *‘‘அவர்கள் ஆயுதங்களுடன் துணிவாக மோட்டார் சைக்கிள்களில் சுற்றித் திரிந்ததை நான் கண்டேன். வேறு எவரும் ஆயுதங்களை வெளிக்காட்டியவாறு செல்லத் துணிய மாட்டார்கள்... அறுகம் குடாவில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களையும், ஆயுதங்கள் வைத்திருந்த சிறுவர்களையும் நான் கண்டேன்.’’*

கருணாவின் ஆட்களை நிறுத்தவோ, சோதனையிடவோ, அவர்கள் செய்யும் விடயங்களில் தலையிடவோ வேண்டாமென்று பொறுப்பதிகாரி தம்மிடம் கூறியதாக ஒரு சாட்சி கூறினார். இந்த உத்தரவுகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாய ராஜபக்ஷவிடம் இருந்து கிடைத்ததாகத் தமது பொறுப்பதிகாரி கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு முறை தமிழ்க் கிராமவாசி ஒருவரை கருணாவின் ஆட்கள் கொலை செய்தார்களெனத் தாம் கேள்விப்பட்டதாகவும், பின்னர் சடலத்தைக் கண்டபோது, அச்சம் காரணமாக அதைத் தாம் அங்கிருந்து அகற்றவில்லையெனவும் சாட்சி ஒருவர் கூறினார். தமிழ்த் துணைப்படைக்

குழுவினர் கோதபாய ராஜபக்ஷவுடன் நேரடியாகத் தொடர்பில் இருந்ததாக இந்தச் சாட்சி நம்புகிறார். அதன் காரணமாக அவர்கள் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளை விட அதிகம் சக்திவாய்ந்தவர்களாகவும், அச்சத்தை ஏற்படுத்துபவர்களாகவும் இருந்தார்கள். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் (அழிக்கப்பட்டுள்ளது) முகாமில் கைதிகளையும், துப்பாக்கியுடன் சிறுவர் படையினரையும் கண்டதாக சாட்சி ஒருவர் கூறுகிறார். '*அந்தக் கைதிகள் திருப்பி வரவில்லையென்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், அந்தக் கைதிகளின் உறவினர்கள் பின்னர் எமது முகாமிற்கு வந்து, தமது அன்புக்குரியவர்கள் குறித்துக் விசாரித்தார்கள்.*'

## 2.11 திட்டமிட்ட 'என்கவுண்டர்' முறைக் கொலைகள் (Staged Encounters)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தங்கியிருந்ததாக நம்பப்படும் தமிழ்க் கிராமம் ஒன்றின் மீது கனரக இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் மோட்டார்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட தாக்குதலில் பங்கெடுத்தமை குறித்து சிறப்பு அதிரடிப்படையின் ஒருவர் தெரிவித்தார். சிறப்பு அதிரடிப்படையினர், தமது படை முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்கியதைப் போன்று காட்டுவதற்காக முகாமின் எல்லையின் மீது சில கையெறி குண்டுகளையும், மோட்டார்களையும் கொண்டு தாக்கியதாக அவர் கூறுகிறார். விடுதலைப் புலிகளே தாக்குதலை நடத்தினார்களென அங்கு போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களை நம்பச் செய்வதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. கிராமத்தின் பெயரும், திகதியும், சாட்சியைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மறைக்கப்பட்டுள்ளன.

### *'உயிர் தப்பி ஓடுங்கள்' மற்றும் 'தப்பமுடிந்தால், உயிர் தப்பிவிடுவீர்கள்'*

சிறப்பு அதிரடிப்படை சாட்சி ஒருவர், சிறப்பு அதிரடிப்படை முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆண்களின் குழுவொன்று இரவில் முகமில் இருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டு, உயிர் தப்பி ஓடுமாறு பணிக்கப்பட்ட சம்பவம் குறித்து விரிவாக விளக்கினார். கைவிலங்கிடப்பட்ட நிலையிலேயே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். விடுதலைப் புலிகளிடம் இருந்து முன்னர் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அங்கு போடப்பட்டு, அவர்களது கைவிலங்குகள் அகற்றப்பட்டன. தமது முகாம் தாக்கப்பட்டதாக பின்னர்

சிறப்பு அதிரடிப்படையினர் தலைமை அலுவலகத்திற்கு அறிவித்தார்கள். சிறப்பு அதிரடிப்படையில் தற்போதும் மிக உயர் பதவியில் இருக்கும் அதிகாரி ஒருவர், இந்த நடவடிக்கைக்காக சிறப்பு அதிரடிப்படைக் குழுவைப் பாராட்டினார். இந்தச் சம்பவத்தில் பங்கெடுத்த, அல்லது கொலைகளைப் பார்வையிட்ட பத்துப் பேரின் பெர்கள் மற்றும் பதவி நிலைகளை இந்தச் சாட்சி வழங்கினார். அத்துடன் கொலை செய்யப்படுவதற்கு முன்பு முகாமில் இந்த ஆண்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்த பெருமளவு படையினரின் விபரங்களையும் அவர் வெளியிட்டார்.

## 1.12 ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் மற்றும் கொலைகள் (Abductions, Illegal Detentions and Killings)

கிழக்கு மாகாணத்தில் சிறப்பு அதிரடிப்படையினரும், கருணா குழுவினரும் படையினருடன் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபாட்டார்கள். ஆட்கள் கடத்தப்பட்டதைப் பின்வரும் சாட்சிகள், கண்டார்கள். கைதிகளைக் கொன்றுவிட்டதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் சிறப்பு அதிரடிப்படையினருக்கு அறிவித்ததாக அவர்கள் தெரிவித்தார்கள்.

> *‘‘இடத்தைச் சிறப்பு அதிரடிப்படையினர் முடிவு செய்தார்கள், நடவடிக்கையின்போது ஏதாவது முடிவெடுக்கப்படவேண்டுமானால், உயர் சிறப்பு அதிரடிப்படை அதிகாரியான (பெயர் அழிக்கப்பட்டுள்ளது) முடிவெடுப்பார். எம்முடன் இராணுவத்தினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் இணைந்து கொள்வார்கள். கருணா குழுவினரின் செயல்கள் குறித்துக் கேள்வி கேட்கவேண்டாமென்று எமக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. உயர் அதிகாரி SSP (பெயர் அழிக்கப்பட்டுள்ளது) உடன் தொலைபேசியில் தொடர்பில் இருப்பார். நாம் கைது செய்யும் ஒவ்வொருவர் குறித்தும் என்ன செய்வதென்று அவரே முடிவு செய்வார்... சில சந்தர்ப்பங்களில் சந்தேக நபர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் கொண்டு செல்லப்பட்டு, அடித்து நொருக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்னர் அவர்களது கிராமத்தில் விடுதலை செய்யப்படுவார்கள். சில சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அவர்களைக் கொலை செய்துவிட்டு, அவர்களைக் கொன்றுவிட்டதாக சிறப்பு அதிரடிப்படையினருக்கு அறிவிப்பார்கள், அதன் பின்னர் சிறப்பு அதிரடிப்படையினர் அந்த விடயத்தில் மேலதிகமாக எதுவும் செய்ய மாட்டார்கள்.*

இதற்கு மேலதிகமாக சிறப்பு அதிரடிப்படை முகாமிகளில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தவர்கள், சில குறிப்பிட்ட இலக்கத் தகடுகளைக் கொண்ட இராணுவ வாகனங்களைச் சோதனையிட வேண்டாமென உத்தரவிடப்பட்டமை குறித்துக் குறிப்பிட்டார்கள். அந்த வாகனங்கள் சோதனையின்றி அனுமதிக்கப்பட்டன: ''*ஆட்கடத்தலுக்கும், ஆட்களை முகாம்களுக்குக் கொண்டு செல்வதற்கும் படையினர் இந்த வாகனங்களைப் பயன்படுத்தியதாக எமது அதிகாரிகள் எமக்குத் தெரிவித்தார்கள்.*''

சிறப்பு அதிரடிப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்து, பின்னர் கொலை செய்யப்பட்ட சந்தேக நபர்கள் குறித்தும் சாட்சிகள் கூறினார்கள்.

> *''அவர்களது கைகளை முதுகின் பின்புறமாகக் கட்டி, வாயை அடைத்து, முகத்தை மூடினோம். சுற்றாடலில் கிராமங்கள் இருந்தமையால் அவர்கள் உதவி கோரிக் குரல் எழுப்புவதைத் தடுப்பதற்காக அவர்களது வாய்களை அடைக்கவேண்டியிருந்தது.... சந்தேக நபர் ஒருவர் சிறப்பு அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டால், அவர்கள் ஒருபோதும் விடுதலை செய்யப்படுவதில்லை, அவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட்டார்கள்.'*

சந்தேக நபர்களைத் தமது மூத்த அதிகாரி ஒருவர் கொலை செய்வதைச் சிறப்பு அதிரடிப்படை உறுப்பினர் ஒருவர் விபரிக்கிறார்:

> *''இரண்டு ஆண்கள் முழந்தாளிட்டிருப்பதைக்கண்டேன். அவர்களது கைகளும் கண்களும் கட்டப்பட்டிருந்தன. அவர்களுக்கு அருகில் நின்ற (மூத்த அதிகாரி – பெயர் அழிக்கப்பட்டுள்ளது) அவர்களை ஒவ்வொருவராக தலையில் T56 துப்பாக்கி மூலம் சுடுவதை மூன்று அல்லது நான்கு மீட்டர் தூரத்தில் இருந்து நான் கண்டேன். அவர்களது உடல்கள் முன்னோக்கி வீழ்ந்தன. என்னுடன் மேலும் பல சிறப்பு அதிரடிாப்படையினர் இந்தத் துப்பாக்கிச் சூடுகளைக் கண்டார்கள்.''*

உடல்கள் பெற்றொல் ஊற்றப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டபோது, அவர்கள் அனைவரும் உணவு உண்டு, ஒரு போத்தல் சாராயத்தையும் அருந்தினார்கள்.

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரெனச் சந்தேகிக்கப்படும் ஆயுதம் இன்றியிருந்த ஒருவரைக் கொலை செய்துவிட்டு, அந்தத் துப்பாக்கிக் குழலில் இருந்த இரத்தத்தைச் சக உறுப்பினர் ஒருவர் தம் முன்பாகத் துடைத்தபோது, மிக அருகில் இருந்து தாம் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக அவர் தம்மிடம் கூறினாரென சாட்சி ஒருவர் விபரித்தார். *''இதுவொரு வழக்கமான சம்பவம், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரெனச் சந்தேகிக்கப்படுபவர் குறித்துத் தகவல் கிடைக்கும்போது, நாம் காவல்துறைச் சீருடையிலோ, அனேகமாக குடிசார் உடையிலோ சென்று அவரைக் கொல்வோம். அனேகமாக நாம் இரண்டு கொன்ஸ்ரபிள்கள் மோட்டார் சைக்கிளில் குடிசார் உடையில் கைத்துப்பாக்கியுடன் செல்வோம்.''*

பெருமளவு கண்ணிவெடிகள் வைக்கப்பட்டிருந்த இடங்களில் கொல்லப்படுவார்கள், அல்லது காயமடைவார்களெனத் தெரிந்துகொண்டே, தமிழ்க் குடிமக்கள் நிலத்தை அகழுமாறு பணிக்கப்படும் வழக்கம் குறித்து சிறப்பு அதிரடிப்படையின் மற்றொரு சாட்சி விளக்கினார். மூத்த அதிகாரி ஒருவர் இவ்வாறு குடிமக்களுக்கு உத்தரவிட்ட சம்பவங்கள் குறித்து அவர் விபரித்தார்:

> *''நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன், இந்த ஆண், ஆயுதம் வைத்திருக்கவில்லை. அவர் உணவு தேடி வந்தவரென்பது தெளிவாகத் தெரிந்தது. படையினர் சிலர் கண்ணிவெடிகளால் காயமடைந்திருந்தமையால், அந்தப் பகுதியில் கண்ணிவெடிகள் வைக்கப்பட்டிருந்தமை அவர்களுக்குத் தெரிந்திருந்தது... பத்து விநாடிகளிலும் குறைவான நேரத்தில் அவர் வெடித்துச் சிதறினார். அந்த ஆண் உடனடியாகவே மரணமானார். இதைக் கேள்விப்படும் ஒருவர் எவ்வாறு வழக்கமாக நடந்து கொள்வாரோ, அதைப் போன்று அவர்கள் யாரும் நடந்து கொள்ளவில்லை. சில நாட்களின் பின்னர் இதைப் போன்று மற்றொருவரும் கொல்லப்பட்டதை நான் கண்டேன்.''*

இந்தச் சாட்சிக்கு சடலங்கள் எங்கு புதைக்கப்பட்டன என்பது தெரியும். அத்துடன் இந்த உத்தரவைப் பிறப்பித்த அதிகாரியின் பெயரையும் அவர் அறிந்திருக்கிறார். அந்த அதிகாரிக்கு பின்னர் பதவி உயர்வும் வழங்கப்பட்டது.

## 2.3 வடக்கு (THE NORTH)

2009 ஆம் ஆண்டில் இலங்கையின் வடக்கில் பணிபுரிந்த சிறப்பு அதிரடிப்படை உறுப்பினர் ஒருவர், ஓர் இரவில் கடத்தலில் பங்கெடுத்தமை குறித்து விளக்கமளித்தார். அதற்கான உத்தரவு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து வந்ததென்று அவருக்குக் கூறப்பட்டது.

> *''ஆட்களைக் கைது செய்வது சிறப்பு அதிரடிப்படையைப் பொறுத்தவரை வழக்கமான விடயமாக இருந்தாலும், நாம் செய்த விடயம் சந்தேகத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியது. இந்த நடவடிக்கையின்போது சிறப்பு அதிரடிப்படை உறுப்பினர்கள் எமக்கு மத்தியில் கதைத்துக் கொண்டோம், எமக்குச் சந்தேகம் ஏற்பட்டது அத்துடன் இது சட்டவிரோதமானதென்றும் நாம் புரிந்து கொண்டோம்.''*

வடக்கில் ஆட்கடத்தலில் சிறப்பு அதிரடிப்படையினருக்கு இருந்த தொடர்பு ITJP க்கு கடத்தப்பட்டவர்கள் வழங்கிய வாக்குமூலங்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 2.4 கொழும்பு (COLOMBO)

#### 2.31 கடத்தல்களின் அளவு (The Scale of Abductions)

கொழும்பிலும், தீவின் ஏனைய பகுதிகளிலும் 2007-8 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் அதிர்ச்சியூட்டும் அளவில் ''வெள்ளை வான்'' கடத்தல்கள் இடம்பெற்றன. அந்தக் காலப் பகுதி குறித்துச் சாட்சிகள் பெரும்பாலானவர்கள் இங்கு விபரித்துள்ளார்கள். 2007 ஆம் ஆண்டில், ஜனவரியில் இருந்து ஓகஸ்ட் வரையான பகுதியில் 540 ஆட்கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றதாக சில இலங்கை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. அவ்வாறு மிக அதிகமான எண்ணிக்கையில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டபோதிலும், பத்து வருடங்களிலும் அதிகமான காலத்தின் பின்னரும், எந்த விதமான பொறுப்புக் கூறலும் இடம்பெறாதமை மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது.

பெரும்பாலான வெள்ளை வான் ஆட்கடத்தல்களுக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே காரணமாக இருந்தார்களென நம்புவதாகவும், ஆனால் ''*மேலதிகமான திட்டம் ஒன்றைச் சிறப்பு அதிரடிப்படையினர் தயாரித்து உதவி புரிந்தார்களென*'' ஆட்கடத்தல்களில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படைச் சாட்சி ஒருவர் கூறினார்.

> *"நாம் சிறப்பு அதிரடிப்படையினர் என்று யாரிடமும் நாம் கூறவில்லை. காவல்துறையினர் என்று மட்டுமே கூறினோம். பல்வேறு பிரிவுகளாக நடவடிக்கைகள் இடம்பெற்றதை உணரக் கூடியதாக இருந்தாலும், அவை அனைத்தும் பொதுவான ஒரு கட்டளைப் பீடத்தின் கீழே இடம்பெற்றன. இடையூறுகள் இன்றியும், ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளின் ஒத்துழைப்புடனும் இயங்குவதற்கு உதவியான அறிவுறுத்தல்கள் எமக்கு வழங்கப்பட்டன."*

என்று அவர் கூறினார்.

கடத்தப்பட்டவர்கள் தொடர்புபட்ட விசாரணைகள், சித்திரவதை, மற்றும் கொலைகளில் தொடர்புபட்டிருந்த சிறப்பு அதிரடிப்படை உறுப்பினர் ஒருவர், போரின் இறுதி மூன்று ஆண்டுகளில் தாம் பணிபுரிந்த இரண்டு குழுக்கள் மட்டும் குறைந்தது 400 பேரைக் கொலை செய்ததாக மதிப்பிட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப்படைச் சாட்சி ஒருவருக்கு சிறப்பு அதிரப்படையின் ஏனைய கடத்தல் குழுக்களின் செயற்பாடுகள் குறித்தோ, அந்தப் பகுதியில் செய்பட்ட கடற்படை, இராணுவம் ஆகியவற்றின் புலனாய்வுப் பிரிவுகளின் செயற்பாடுகள் குறித்தோ எந்த அளவு விபரங்கள் தெரிந்திருக்குமென்பதை அறிந்து கொள்வது கடினமானது.

சந்தேக நபர்களைக் கடத்துவதில் பங்கெடுத்த சில சிறப்பு அதிரடிப்படைச் சாட்சிகள், கடத்தப்பட்டவர்களை கடற்படை, பயங்கரவாத விசாரணைப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றின் உறுப்பினர்களிடம் வெவ்வேறு இடங்களில் ஒப்படைத்தமை குறித்தும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தச் சட்டவிரோத செயற்பாட்டில் பல்வேறு பாதுகாப்புப் பிரிவுகளுக்கு இடையில் ஒரு குறிப்பிட்ட அளவு ஒருங்கிணைப்பு இருந்ததென்பதையும், இந்த மீறல்கள் கட்டமைப்பு ரீதியாக இடம்பெற்றதென்பதையும் இந்தத் தகவல் காட்டுகிறது.

### 2.32 ஆட்சேர்ப்பு (Recruitment)

ஊடகவியலாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசுக்கு எதிரானவர்கள் ஆகியோரைப் பிடிக்கவேண்டியிருக்குமென்று தமது அணியின் தலைவர் தமக்குக் கூறினாரென்று ஆட்கடத்தல்களில் பங்கெடுத்த இந்தச் சாட்சி தெரிவித்தார்:

> *‘‘அவர் அது குறித்து விளக்கமளித்த முறை சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. சட்டவிரோதமான செயற்பாடுகளும் இடம்பெறுமென்று நான் சந்தேகிக்கவில்லை. நான் முன்னர் பங்கெடுத்த, சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் போன்றதாக இவையும் இருக்குமென நான் கருதினேன்.’’*

தமது நடவடிக்கைகளை இரகசியமாக வைத்திருக்குமாறு தமக்கு அறிவுறுத்தப்பட்டதென மற்றொருவர் கூறினார்:

> *‘‘இரகசியம் எனும்போது, எனது சகாக்களுடனோ, எனது குடும்பத்துடனோ இது குறித்துப் பேசாதிருப்பதும் அடங்கியிருந்தது.... நாம் செய்யும் விடயம் ஸ்ரீலங்காவைப் பாதுகாக்கும் நோக்கத்துடனான செயலென்றும், சட்டவிரோதமானதல்லவென்றும் அவர்கள் விளக்கினார்கள்... இது முக்கியமான பணியென்றும், தமிழீழ விடுதலைப் புலிகளை செயலிழக்கச் செய்து அழிக்கும் போரில் எனக்கு உண்மையான ஒரு பங்கு இருக்கிறதென்றும் நான் உணர்ந்தேன். பாதுகாப்பு நிலைமையையும், இந்த நடவடிக்கை விடுதலைப் புலிகள் அட்டூழியங்களைப் புரிவதைத் தடுக்குமென்றும் நான் உணர்ந்திருந்தேன். ஆனால், இந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் ஆட்களைக் கொல்வோமென்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்காக விசாதணை செய்வோமென்று நான் கருதினேன்.’’*

தாம் ஆட்களை விசாரணை செய்து கொலை செய்தாரென்று வாக்குமூலம் வழங்கிய சிறப்பு அதிரடிப்படை அதிகாரி ஒருவர், அந்தப் பணிக்குத் தாம் தெரிவு செய்யப்பட்டதையிட்டு பெருமை கொள்கிறார்:

> *‘‘இந்த அணியில் விண்ணப்பிப்பதன் மூலம் யாரும் இணைந்து கொள்ள முடியாது. சிறப்பான முறையில் எத்தனை வருடங்கள் பணிபுரிந்தோம், எந்த உத்தரவாக இருந்தாலும் அதற்குக் கீழ்ப்படியும் பாங்கு போன்றவற்றின் அடிப்படையில் நாம் தெரிவு செய்யப்பட்டோம். நான் சிறப்பு அதிரடிப்படையின் உறுப்பினராக இருந்தமையையிட்டு பெருமை கொள்கிறேன். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான போரில் சிறப்பு அதிரடிப்படை சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.’’*

தம்மை இணைத்துக் கொண்ட மூத்த அதிகாரியின் பெயரையும், பதவி நிலையையும் இந்தச் சாட்சி தந்துள்ளார். போர் முடிவடைந்த பின்னர்

அந்த நபர் பிரதிக் காவல்துறை மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். கடத்தல்கள் இடம்பெற்றபோது, கடத்தல்கள் குறித்து நேரடியாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பவராக இந்த நபர் இருந்தாரென்றும் இந்தச் சாட்சி கூறியுள்ளார்.

வழக்கமான நீதி நடைமுறைகளைப் புறக்கணிப்பதற்கு ஆரம்பத்திலேயே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பணிக்கு அனுப்பப்படுவதற்கு முன்பான பயிற்சியில் மனித உரிமைகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) தமக்கு வகுப்பெடுத்ததென்று சிறப்பு அதிரடிப்படைச் சாட்சி ஒருவர் கூறினார். ஆனால், இந்தப் பயிற்சியின்போது ICRC கூறிய விடயங்களைப் பொருட்படுத்தாது விடுமாறு தமக்கு உத்தரவிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்:

> *''அது அர்த்தமற்றதென்றும், அவர்கள் கூறுவதை உண்மையிலேயே புறக்கணிக்கவேண்டுமெனவும் எமது பயிற்சியாளர்கள் மிகத் தெளிவாகக் கூறினார்கள். உண்மையில், அந்தப் பயிற்சியின் இடைவேளைகளின்போதுகூட ICRC கூறுவதைக் கவனத்தில் எடுக்க வேண்டாமென்று எமது வழக்கமான பயிற்சியாளர்கள் எச்சரித்தார்கள். ICRC மொழிபெயர்ப்பாளர்கள் முன்னிலையில் கூட அவர்கள் இதைக் கூறினார்கள்.''*

### 2.33 பாதிக்கப்பட்டவர்கள் (Victims)

அரசுக்கு எதிரானவர்கள் கடத்தப்பட்டதாக சிறப்பு அதிரடிப்படைச் சாட்சிகள் கூறினார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாக இருந்தாலும், சில சிங்களவர்களும், முஸ்லிம்களும் கூட கடத்தப்பட்டார்கள். பாதுகாப்புப் படைக் கட்டமைப்பின் மேல் மட்டத்தினால் அடையாளம் காணப்பட்ட அரசியல் இலக்குகளாக சிலர் இருந்தார்கள் - ஏனையோர், சிறப்பு அதிரடிப்படையினர் சுற்றுக் காவலில் ஈடுபடும் கிராமங்களில் உள்ள தகவல் வழங்குவோரின் வலையமைப்பு மூலமாகவும், கருணா குழுவின் மூலமும் அடையாளம் காணப்பட்டார்கள். இதை விசாரணையாளர் ஒருவர் இவ்வாறு காண்கிறார்:

> *''இரண்டு வகையான மக்கள் மட்டும் இருப்பதாக அரசு கருதியது. ஒரு பிரிவினர் என்ன விலை கொடுத்தாவது போரில் அரசு வெல்வதை ஆதரிப்போர் மற்றையோர் அவர்களுக்கு எதிரானவர்கள். நீங்கள் எதிரானவரென கருதப்பட்டால், அவர்களது பார்வையில் நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவராக கருதப்பட்டீர்கள். அரசுக்கு எதிராகவும், ராஜபக்ஷ சகோதரர்களுக்கு*

> *எதிராகவும் குரல் கொடுத்தவர்கள் சிலர் இருந்தார்கள். தமிழ் அரசியல்வாதிகள் (TNA), சிங்கள மற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் அவர்களில் அடங்கியிருந்தார்கள்.''*

ஆட்கடத்தலில் தவறுகள் இழைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் குறித்தும் சாட்சிகள் கூறினார்கள்.

> *சில சந்தரப்பங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லாதவர்களையும் நாம் கைது செய்தோம். உதாரணமாக, அவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்ளைத் தெரிந்திருக்கலாம், ஆனால், தமது நண்பர் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினரென அவருக்குத் தெரியாதிருக்கும். பிரச்சினை என்னவென்றால், அவர்களைக் கைது செய்து, அவர்களுக்குத் தமது நண்பர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரென்று தெரியாதென்றோ, தெரியுமென்றோ கண்டாலும் அவர்களைப் போக அனுமதிக்க முடியாது. அதனால், அவர்களை நாம் கொன்றோம். ஆனால், அதை விரைவாகச் செய்ய முற்படுவோம்.''*

மற்றொரு சாட்சி இவ்வாறு குற்றம் சுமத்துகிறார்: ''யாரைக் கடத்துவதென்று இராணுவம் மற்றும் கடற்படை ஆகிய இரண்டிடம் இருந்தும் சில சந்தர்ப்பங்களில் காவல்துறை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இருந்தும் எமக்கு அறிவிக்கப்பட்டது.'' ஆட்களை எழுந்தமானமாக கடத்தி, அவர்களை முகாம்களில் ஒப்படைப்பதும், அவர்கள் அங்கு கொல்லப்படுவதும் அவருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது.

## 2.34 கடத்தல் நடைமுறை (Abduction Procedure)

ஆட்கடத்தல் நடைமுறை குறித்து ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கையிலும் (OISL), ITPJ அறிக்கைகள் பலவற்றிலும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு குழு வானில் ஆட்களைக் கடத்தும், மற்றொரு குழு அவர்களை விசாரணை செய்யும்.

வீதியில் இருந்து ஒருவரைக் கடத்துவது குறித்து ஒத்திகை பார்த்தமை குறித்து சாட்சி ஒருவர் விளக்கமளித்தார்:

*‘‘ஆட்களை வீதியில் இருந்து வேகமாகவும் செயற்திறனுடனும் கடத்துவது குறித்து நாம் எமது தலைமையகத்தில் ஒத்திகை பார்த்தோம். அனேகமானவர்கள் கைவிலங்கிடப்பட்டு, அவர்களது தலையின் மேலாகப் பை ஒன்று போடப்பட்டது. கடத்தப்பட்டவர்கள் பல சந்தர்ப்பங்களில் அவலக் குரல் எழுப்பினார்கள், சில சந்தர்ப்பங்களில் எதிர்த்தார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் அவர்கள் பலவந்தமாக அடக்கப்பட்டார்கள்.’’*

2007-8 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொழும்பில் இயங்கிய பல வெள்ளை வான் ஆட்கடத்தல் அணிகளில் ஒன்றின் உறுப்பினராக இருந்தமை குறித்து மற்றொரு சாட்சி விபரித்தார்:

*‘‘கடத்தி, பிடித்து வைத்து, அவர்களை ஒப்படைப்பது மட்டுமே எமது பணியாக இருந்தது… நாம் வெள்ளை வான் ஒன்றில் நடமாடினோம். பொதுவாக ரொயோட்ரா ஹையேஸாகவும், சில சந்தர்ப்பங்களில் டி.ஃபென்டராகவும் இருந்தது…. அனேகமான சந்தர்ப்பங்களில் ஆட்கடத்தல் என்பது வழமையான நடைமுறையாக இருந்தது. சந்தேக நபர் ஒருவர் எதிர்த்து முரண்படுவது போன்ற சம்பவங்கள் இடம்பெறுவது அரிதானதாக இருந்தது.’’*

2009-10 ஆம் ஆண்டுப் பகுதியில் தமது சட்டவிரோத நடவடிக்கையை மறைப்பதற்கு சிறப்பு அதிரடிப்படையினர் இலக்கத் தகடுகளை மாற்ற ஆரம்பித்தார்களென ஒரு சாட்சி கூறினார:

*‘‘இந்த முகாமில் யன்னல்கள் கரிய நிறமாக்கப்பட்ட ஒரு வெள்ளை டொல்.ஃபின் வான் இருந்தது. சிறப்பு அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவினர் ஆட்களைக் கடத்துவதற்கு அதைப் பயன்படுத்தினார்கள். அந்த வான் ஆட்களைக் கடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டதை அனைவரும் அறிந்திருந்தார்கள். அந்த முகாமில் இருந்து வான் வெளியே சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போலியான ஒரு இலக்கத்தகடு அதில் பொருத்தப்பட்டது. புலனாய்வு அதிகாரிகள் அந்த வாகனத்தை வெளியே கொண்டு சென்று, வெறுமையாக திரும்பி வந்தார்கள். ஆட்களைக் கடத்தி அவர்களை வேறு முகாம்களுக்கு அவர்கள் கொண்டு சென்றார்கள்.’’*

2.35 கொழும்பில் இருந்த தடுப்பு முகாம்கள் (Detention Sites in Colombo)

வடக்குக் கிழக்கை விட, கொழும்பில் பல சட்டவிரோத, மற்றும் இரகசிய தடுப்பு நிலையங்கள் இருந்ததாகவும், வெவ்வேறு குழுக்கள் ஒன்றொடொன்று தொடர்பின்றின் கடத்தல்களில் ஈடுபட்டமையும் சாட்சியங்களில் இருந்து தெரியவருகிறது. ஒரு வெள்ளை வான் அணி, பனாகொடவில் நிலைகொண்டிருந்தது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இந்த இடங்களில் தற்போதும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக யாரும் கூறவில்லை. கடத்தப்பட்டவர்கள் பொதுவாக ஒரு சில நாட்களோ, ஆகக் கூடியது சில வாரங்களோ மட்டுமே அவற்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

மற்றொரு சாட்சி அனேகமாக கொழும்பில் பணிபுரிந்தமை மற்றும் 50 க்கும் அதிகமான வெள்ளை வான் கடத்தல்களில் பங்கெடுத்தமை குறித்து விபரித்தார்: ''*உயிருள்ளவரோ, அல்லது உயிரற்ற உடலோ நாம் சேகரித்து ஒப்படைத்தோம்,*'' என்று அவர் கூறினார். பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்திற்கு சிலரைக் கொண்டு சென்றதாக அவர் உறுதிப்படுத்தினார். அங்கு சுவர்களில் இரத்தம் காரணமான கரிய அடையாளங்கள் இருந்ததைப் பார்த்தாக அவர் கூறினார். வேறு ஆட்கள், இராணுவ, அல்லது கடற்படைக் கட்டங்களுக்கோ, வேறு பிரிவுகளிடமோ ஒப்படைக்கப்பட்டார்கள்.

> ''*பல சந்தர்ப்பங்களில் அவர்களை நாம் வீதியில் வைத்துக் கையளித்தோம். எந்தப் பாதுகாப்புப் பிரிவிடம் அவர்களை நாம் கையளிக்கிறோம் என்ற விடயம் எல்லா வேளைகளிலும் தெளிவாகத் தெரியவில்லை. கேட்ட கேள்விகளுக்குத் தெளிவான பதில்கள் கிடைக்காதமையால், நான் கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டேன். ஒரு முறை அலுவல் முடிவடைந்த பின்னர் கேட்டபோது, வேலை முடிவடைந்துவிட்டது, இனிமேல் அதைப் பற்றிக் கேள்வி கேட்கக்கூடாதென்று என்னிடம் நேரடியாகவே முகத்தை முறிப்பதுபோன்று கூறப்பட்டது.*'

கடத்தப்பட்டவர்களை பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு செல்வதற்கு சிறப்பு அதிரடிப்படையினர் பயன்படுத்தப்பட்டதைப் பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதி ஒருவர் உறுதி செய்தார்:

*‘‘பெரும்பாலான வெள்ளை வான் ஆட்கடத்தல்களை சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்டு, கைதிகளை பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்திடம் ஒப்படைத்தார்கள். பயங்கரவாத விசாரணைத் திணைக்கள நிலையத்தில் மூன்று வெள்ளை (ஹையேஸ் டெலிக்கா) வான்களும், ஒரு சாம்பல் பென்ஸ் வானும் இருந்தன. சில கைதிகள் இந்த வான்களைக் கழுவுவார்கள். மேலதிகமாக உணவு கிடைப்பதும், ஆட்கள் நிரம்பிய சிறைக் கூண்டுகளில் இருந்து வெளியே செல்வதற்குச் சந்தர்ப்பமாகவும் இருந்தமையால் இதுவொரு சலுகையாகக் கருதப்பட்டது. வாகனங்களை வாடகைக்கு விடும் வணிக முயற்சி ஒன்றை (பயங்கரவாத விசாரணைத் திணைக்கள அதிகாரி – பெயர் அழிக்கப்பட்டுள்ளது) மேற்கொண்டாரென நான் புரிந்து கொண்டேன்.’’*

மற்றொரு சாட்சி, கொழும்பில் இருந்த சில இரகசிய தடுப்பு நிலையங்களைத் தாம் விசாரணைகளுக்காகப் பயன்படுத்தியதாக கூறினார். இந்த நிலையங்கள் தடயங்களை அழிப்பதற்காக அடிக்கடி துப்பரவு செய்யப்பட்டன. இராணுவ புலனாய்வுப் பிரிவினர் சடலங்களைக் கைவிட்டுச் செல்வார்களென குறை கூறிய அவர், சடலங்களின் தடயங்களைத் தாம் விட்டுச் செல்வதில்லையென்று பெருமைப்பட்டுக் கொண்டார்.

கொழும்புக்குத் தெற்கில் பாணந்துறையில் நிலக்கீழ் சிறை அறைகளைக் கொண்ட சித்திரவதை நிலையம் ஒன்று இருந்தது. அந்த நிலையம் குறித்து விரிவாகக் கூறிய சாட்சி, வரைந்தும் காட்டியுள்ளார். தமிழர்களும், சிங்களவர்களும் அங்கு தடுத்து வைக்கப்பட்டு, கைகளும் வாய்களும் கட்டப்பட்ட நிலையில் சித்திரவதை செய்யப்பட்டதாக அவர் கூறினார். அவர்களில் சிலர் பின்னர் கிழக்கு மாகாணத்தில் உள்ள கிரானுக்குக் கொண்டு செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

## 2.36 சித்திரவதையும் கொலையும் (Torture and Killing)

*‘‘நாங்கள் அவர்களை சுருக்கிட்டோ, கழுத்தை நெரித்தோ, குத்தியோ, அடித்தோ கொல்வோம்’’.*

பாதிக்கப்பட்டவர்களை விசாரணை செய்வதில் பங்கெடுத்த ஒரு சாட்சி, அவர்கள் அனைவரும் இறுதியில் கொல்லப்பட்டார்களெனக் கூறினார். அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைத்தாலும், அனைத்துத்

தகவல்களையும் அவர்கள் வழங்கினார்களென்பதை உறுதி செய்வதற்காக அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒரு மாதம் வரை விசாரணை செய்யப்பட்டார்கள்.

> *‘‘அவர்களது தலைகளை பிளாஸ்ரிக் பைகளால் மூடி, அவர்கள் சுவாசிப்பதைத் தடுப்போம். இது அவர்களை மிகவும் அச்சமடையச் செய்தமையால் எமக்குக் கூறுவார்கள். அவர்களது தலையைப் பைகளால் மூடி, அதனுள் மெதுவாக நீரை நிரப்புவோம். அவர்கள் மூழ்கத் தொடங்குவார்கள். கொறடுகளால் அவர்களது நகங்களைப் பிடுங்குவோம். அவர்களுக்கு மின்னதிர்ச்சி வழங்குவோம். அவர்களைத் தலைகீழாகத் தொங்கவிட்டு, அவர்களது ஆணுறுப்பில் மின்சாரத்தைப் பாய்ச்சுவோம். அவர்கள் தகவல்களை வழங்கும் வரை மின்சார அளவை அதிகரிப்போம்.’’*

சடலங்ளை அழிப்பதற்காக சேகரித்த மற்றொரு சாட்சி இதைக் கூறினார்:

> *‘‘தீயில் எரிக்கப்பட்ட சில சடலங்களின் நிலையை நான் கண்டேன். அவர்கள் மோசமாகத் தாக்கப்பட்டிருந்தார்கள். அந்த உடல்கள் நிர்வாணமாக இருந்தன. ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டு சடலங்களின் குதங்களில் ஏதோ செருக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன்.’’*

2008 ஆம் ஆண்டில் கொழும்பில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் தாம் ஒருவரைக் கைது செய்து, அவரைச் சிறப்பு அதிரடிப்படை முகாமிற்கு கொண்டு சென்று ஒப்படைத்ததாகவும், சில மணி நேரத்தில் அவரது சடலம் தம்மிடம் வழங்கப்பட்டு, அழிக்கப்படுவதற்காக கொழும்பின் வெளியே உள்ள முகாம் ஒன்றிற்கு அதைக் கொண்டு செல்லுமாறு உத்தரவிடப்பட்டதாகவும் சாட்சி ஒருவர் கூறினார். அவர் தடுத்து வைக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட கட்டடத்தின் ஆள்கூறுகளை இந்தச் சாட்சி ITJP யிடம் வழங்கியுள்ளார்.

> *‘‘பின்புறம் இருந்த உடல் பிளாஸ்ரிக்கினால் சுற்றப்பட்டிருந்தபோதிலும், என்னால் பார்க்கக் கூடியதாக இருந்தது. நாம் அங்கு அழைத்துச் சென்ற இளைஞனின் முகம் அது என்பதை என்னால் பார்க்கக் கூடியதாக இருந்தது. அவரது முகம் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தது. அந்த வாகனத்தின் பின்பக்கத்தில் சடலத்துடன் நான் பயணம் செய்தேன்.’’*